

வேலூர் பேபி மஹாலில் நேற்று முன்தினம் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர் சிறப்பு மலரை கழக பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, ஆர். காந்தி, குழு உறுப்பினர்கள் மற்றும் நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, கூடுதல் செயலாளர் திருமதி.மலர்விழி, மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர் து.மு.கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார். ப.கார்த்திகேயன், திருமதி அமுலு விஜயன், அ.செ. வில்வநாதன், ஜே.எல். ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு. மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திரையுலகம், அரசியல் உலகில்

# கலைஞர் தொட்ட சிகரத்தை யாரும் தொட முடியாது!

## வேலூரில் கலைஞர் நூற்றாண்டு விழாவில் அமைச்சர் துரைமுருகன் பெருமிதம்!

வேலூர். நவ.27-

“திரையுலகம், அரசியல் உலகில் கலைஞர் தொட்ட சிகரத்தை யாராலும் தொட முடியாது” என கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வரும் நிலையில் நீர்வளத்துறை சார்பில் வேலூரில் ‘பகுத்தறிவு சீர்திருத்த செம்மல் கலைஞர்’ என்ற தலைப்பில் நேற்று முன்தினம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதன் ஒரு பகுதியாக, வேலூர் நகர அரங்கில் புகைப்படக் கண்காட்சியை கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

தொடர்ந்து, தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ‘பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் கலைஞர் நூற்றாண்டு விழா” சிறப்பு மலர் மற்றும் குறும் படத்தை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டார்.

முன்னதாக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசும்போது, ‘கலைஞரும் திருவண்ணாமலையில் உள்ள அருணாச்சலேஸ்வரரும் ஒன்று தான். ஏனென்றால், அருணாச்சலேஸ்வரர் அடி, முடி காண முடியாதவர். அதுபோலத்தான் கலைஞரும். அவர் தொட்ட சிகரத்தை யாரும் தொட்டது கிடையாது.



திரைப்பட உலகில் பராசக்தி, மனோகரா படங்களின் வசனம் போல் கடந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகும் யாராலும் வேறு ஒரு வசனத்தையும் எழுத முடியவில்லை. புதிதாக நடிக்க வருபவர்களை பராசக்தி வசனத்தை பேசச் சொல்லித்தான் தேர்வு வைக்கின்றனர்.

அதேபோல், அரசியல் உலகில் சுதந்திர தினம், குடியரசு தின விழாவுக்கு ஆளுநர் தேசிய கொடியேற்றிய நிலையில் சுதந்திர தினத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர்கள் தேசிய கொடியை ஏற்ற வேண்டும் என இந்திரா காந்தியிடம் கேட்டவர் கலைஞர்.

அதன் விளைவு சுதந்திர தின விழாவில் முதல்வர்கள் தேசிய கொடி ஏற்றலாம் என்ற உரிமையை வாங்கிக்கொடுத்தவர் கலைஞர். வங்கிகளை தேசிய மயமாக்க இந்திரா காந்திக்கே யோசனை கொடுத்தது கலைஞர் தான். திருவள்ளுவருக்கு வானுயர்ந்த சிலை, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து, மெட்ராஸ் என்பதை சென்னை என்று மாற்றி அவர் செய்ததை யாரும் தொட முடியாது. அவரது எழுத்து, பேச்சு, நிர்வாகத்தை யாரும் தொட முடியாது.

பேரறிஞர் அண்ணா மீது அபரிமிதமான பற்றுக்கொண்டவர். தினசரி 500 முறையாவது அறிஞர் அண்ணாவின் பெயரை கூறி விடுவார். ஒரு தொண்டன், தலைவராய் எப்படி இருக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டாய் இருந்தவர் கலைஞர். அதை நிரூபித்தும் காட்டினார். எதையும் சாதிக்கும் குணம் கலைஞருக்கு உண்டு”.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, ஆர்.காந்தி ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

இதில், நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் சந்தீப் சக்ஸேனா, வேலூர் மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், எம்.எல்.ஏ.க்கள் நந்தகுமார், கார்த்திகேயன், அமலு விஜயன், வில்வநாதன், ஈஸ்வரப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நூற்றாண்டு விழாவில் திருச்சி கலைக்காவேரி கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி.சிறப்புரையாற்றி வாழ்த்திப் பேசினார்.

தொடர்ந்து, மாலை 6 மணியளவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் நிலைத்த புகழுக்குப் பெரிதும் காரணம் இலக்கியப் பணியா? சமுதாயப் பணியா? என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. நகைச் சுவை நாவலர் புலவர் மா.ராமலிங்கம் நடுவராகவும், இலக்கியப் பணியே என்ற தலைப்பில் குறிஞ்சிப்பாடி முனைவர் இரா. நவஜோதி, பட்டுக் கோட்டை முனைவர் பி.பாஸ்கர், திருச்சி அன்னலட்சுமி ஆகியோர் பேசினர். சமுதாயப் பணியே என்ற தலைப்பில் சேலம் அபு, மணப்பாறை கவிஞர் லலிதா, திருத்தணி வேதநாயகி ஆகியோர் பேசினர்.



மேனாள் இந்தியப் பிரதமர் சமூகநீதிக் காவலர் வி. பி. சிங் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள வருகை புரிந்த உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் அவர்களை நேற்று (26.11.2023) சென்னை விமான நிலையத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், ஆகியோர் வரவேற்றனர்.

### எஸ்.மதன்மோகன் தலைமை! கே.மகேஷ் வரவேற்புரை! சேப்பாக்கம் 62(அ) வட்டத்தில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் பொதுக்கூட்டம் - அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

## தயாநிதி மாறன் எம்.பி. -மு.க.தமிழரசு - நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை,நவ,27,

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி, 62(அ) வட்ட தி.மு.க.சார்பில், கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (28.11.2023 செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டை, கலவைத் தெரு, சாமி பண்டாரம் தெரு சந்திப்பு சிந்தாதிரிப்பேட்டையில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன் தலைமை வகிக்கிறார். வட்டச் செயலாளர் கே.மகேஷ் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். வட்டச் செயலாளர் ஆர். ஜெகதீசன், எம்.ராஜகாந்தம், எஸ்.சுரேஷ்குமார், பி. ராஜேஷ், மிக்ஸி கே.அலீப், மல்லிகாபீ, பி.பாலசந்தர், எம்.நந்தகுமார், ஆர்.சிவராஜ், எப்.நசீர், ஆர்.ராதாகிருஷ்ணன், எஸ்.கார்த்திக், யு.பாஷா, ஆர்.ரங்கநாதன், ஏ.அன்வர்பாஷா, பி.எஸ். சத்தீஷ், எஸ்.சங்கர், கே.டி. ராமலிங்கம், டிங்கர் பாஸ்கர், என்.எஸ்.பாஸ்கரன், பி.பரமசிவம், வி.நடராஜ், எச்.ஸ்ரீகாந்த், வேளாங்கன்னி, சாந்தி, வசந்தா, ஆனந்தி, லட்சுமி பாய், சுந்தரிபாய் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந் நிகழ்ச்சியில் நல உதவிகள் வழங்கி அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை யாற்றுகிறார்.

மேலும் இதில் தயாநிதி மாறன் எம்.பி., மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பி.பிரபாகரன், மு.சின்னராஜ், கே.கோபி, ஏ.தமீம் அன்சாரி, ஜி.வெங்கடேசன், எம்.சி.பி.இளையராஜா, எஸ்.கே.ராஜ், பா.சிதம்பரம், எஸ்.எச்.ரகமதுல்லா, ஜி.ராஜராஜன், ரங்கராஜன், ஜெ.விஜய், வெ.தமிழன்பன், வழக்கறிஞர் எஸ். சுகேந்திரன், ஜி. ஜெ.கிரிதரன், என்.சுரேஷ், பி.சலாவுதீன், பி.எஸ்.ஸ்ரீதர், என்.குமரன், ஜி.வி. பாலாஜி, சி.சாய்குமார், சி. சாது, வி.கதிரவன், ஆர்.எஸ். சந்திரகுமார், ராமச்சந்திரனௌ, சிவா, வெங்கடேசன், காளி, சக்திவேல், ராஜ்குமார், எஸ்.எஸ்.கண்ணன், ஐ.ஜஹாங்கீர், எம்.சுமதி, என்.செல்வம், துலசை அமான் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். எம். நிஜாம், பி.அமுதா, கே.முருகேசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

